# ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

**2021 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் நாள் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

*முன்னிலை :- திருமதி. D. மல்லிகா, B.Sc,*
*தனி அதிகாரி.*

**பொருள் எண் : 279**

15 வது நிதிக்குழு 2020-21 இரண்டாவது ஒதுக்கீடு பணிகளில் நகராட்சி அலுவலக தரைமட்ட குடிநீர் தொட்டியில் ஊரணிப்பட்டி மேல்நிலைத்தொட்டி, கோட்டைப்பட்டி மேல்நிலைத்தொட்டி மற்றும் நகராட்சி அலுவலக மேல்நிலை தொட்டி ஆகிய 3 மேல்நிலை தொட்டிகளுக்கும் புதிய சப்மெர்சிபிள் மோட்டார்கள் பொருத்தும் பணி மற்றும் செண்பக தோப்பு குடிநீர் தலைமையிடத்தில் புதிய சப்மெர்சிபிள் மோட்டார் பொருத்தும் பணிக்கு 30-11-2021 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விகிதம். |
|---|---|---|
| 1 | திரு மு.முத்துராமகிருஷ்ணன். | 0.01 % குறைவு |
| 2 | திருமதி மு.முத்துலட்சுமி. | 3.00 % அதிகம். |
| 3 | ஸ்ரீ ராயல் எலக்ரிகல்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 21.74 % குறைவு |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ ராயல் எலக்ரிகல்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத்தொகை செலுத்தப்படவில்லை. எனவே நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் திரு மு.முத்துராமகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக உள்ளதை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட பணியினை ரூ.16,60,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 15-11-2021 ம் தேதி தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு மு.முத்துராமகிருஷ்ணன். என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.01% அதிகமாக உள்ளதை ஒப்புக்கொள்ளலாம். ( **ந. க. எண் 2021/ 4046/ இ1** )

**பொருள் எண் : 280**

15 வது நிதிக்குழு 2020-21 இரண்டாவது ஒதுக்கீடு பணிகளில் கோட்டைப்பட்டி நீர் தேக்க தொட்டியில் புதிதாக 20 எச். பி. சென்ட்ரிபியுகல் பம்ப் மாற்றும் பணிக்கு 30-11-2021 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விகிதம். |
|---|---|---|
| **1** | ஸ்ரீ ராயல் எலக்ரிகல்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 6.40 % குறைவு |
| **2** | திரு எஸ்.பிரபுராம், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 6.28 % அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் ஸ்ரீ ராயல் எலக்ரிகல்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 6.40% குறைவாக உள்ளதை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட பணியினை ரூ24,40,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 15-11-2021 ம் தேதி தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ ராயல் எலக்ரிகல்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 6.40% அதிகமாக உள்ளதை ஒப்புக்கொள்ளலாம். ( **ந. க. எண் 2/2021/ 4046/ இ1** )

**பொருள் எண் : 281**

15 வது நிதிக்குழு 2020-21 இரண்டாவது ஒதுக்கீடு பணிகளில் கோட்டைப்பட்டி நீர்தேக்கம் மற்றும் நகராட்சி அலுவலக நீர் தேக்க தொட்டியில் 5 கிலோ குளோரினேசன் கேஸ் பிளாண்ட் அமைத்தல் மேலும் 100 கிலோ கொள்ள எவு கொண்ட சிலிண்டர் பம்ப் ஹவுசில் சப்ளை செய்தல் பணிக்கு 30-11-2021 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரார் பெயர். | மதிப்பீட்டிற்கு விகிதம். |
|---|---|---|
| 1 | திரு ஜி.மணிகண்டன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 0.11 % குறைவு |
| 2 | திரு எம்.கே.ஸ்ரீகுமரன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 2.65 % அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் திரு ஜி.மணிகண்டன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.11% குறைவாக உள்ளதை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட பணியினை ரூ 25,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 15-11-2021 ம் தேதி தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு ஜி.மணிகண்டன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.11% அதிகமாக உள்ளதை ஒப்புக்கொள்ளலாம். ( **ந. க. எண் 3/2021/ 4046/ இ1** )

**பொருள் எண் : 282**

15 வது நிதிக்குழு 2020-21 இரண்டாவது ஒதுக்கீடு பணிகளில் கம்மாப்பட்டி காமராஜர் தெரு கழிப்பறை, அய்யம்பட்டி பெண்கள் கழிப்பறை, சாத்தூர் பிரதான சாலை கழிப்பறை ரைட்டன் பட்டி ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடம் பழுதுபார்த்தல் பணிக்கு 30-11-2021 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரார் பெயர். | மதிப்பீட்டிற்கு விகிதம். |
|---|---|---|
| 1 | திரு ஜி.மணிகண்டன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 3.34 % அதிகம். |
| 2 | திரு எம்.கே.ஸ்ரீகுமரன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 11.48 % அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு ஜி.மணிகண்டன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 3.34% அதிகமாக இருந்ததால் விலை விகிதம் குறைத்துக்கொடுக்க Negotiation அறிவிப்பு அனுப்பப்பட்டது. திரு ஜி.மணிகண்டன் தனது 30-11-2021 ம் தேதிய கடிதத்தில் விலைவிகிதத்தினை குறைத்து மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து தர சம்மத்தித்துள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட பணியினை ரூ15,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 15-11-2021 ம் தேதி தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு ஜி.மணிகண்டன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுவிலை விகிதத்தில் உள்ளதை ஒப்புக்கொள்ளலாம்.

( **ந. க. எண் 4/2021/ 4046/ இ1** )

**பொருள் எண் : 283**

15 வது நிதிக்குழு 2020-21 இரண்டாவது ஒதுக்கீடு பணிகளில் அய்யம்பட்டி பிள்ளையார் கோவில் தெரு ஆண்கள், பெண்கள் கழிப்பிடம், மற்றும் அடைய பொட்டல் தெரு கழிப்பிடம் பராமரிப்பு செய்தல். பணிக்கு 30-11-2021 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரார் பெயர். | மதிப்பீட்டிற்கு விகிதம். |
|---|---|---|
| 1 | திரு ஜி.வெங்கடேசன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 4.72 % அதிகம். |
| 2 | திரு ஜி.மணிகண்டன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 11.48 % அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு ஜி.வெங்கடேசன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.72% அதிகமாக இருந்ததால் விலை விகிதம் குறைத்துக்கொடுக்க Negotiation அறிவிப்பு அனுப்பப்பட்டது. திரு ஜி.வெங்கடேசன் தனது 30-11-2021 ம் தேதிய கடிதத்தில் விலைவிகிதத்தினை குறைத்து மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து தர சம்மத்தித்துள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

1) மேற்கண்ட பணியினை ரூ12,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 15-11-2021 ம் தேதி தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு ஜி.வெங்கடேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுவிலை விகிதத்தில் உள்ளதை ஒப்புக்கொள்ளலாம்.

( **ந. க. எண் 5/2021/ 4046/ இ1** )

## <u>பொருள் எண் : 284</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN 84 J 4902, TATA ACE LCV வாகனத்திற்கு பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மான எண் நாள் 29.10.2021 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு 09.11.2021 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது, வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றன.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | R.A. 267, Srivilliputtur Block Agro Engg & Service Co-op Centre Ltd, Madavar vilagam pillaiyar kovil St, Srivilliputtur. | 52000/- |
| 2 | Sp.Spl 177 Rajapalayam Agro Engg & Service Co-op Centre Ltd. | 52700/- |

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.52000/- R.A. 267, Srivilliputtur Block Agro Engg & Service Co-op Centre Ltd, என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலையில் தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

( **ந. க. எண் 2021/ 6713/ H2** )

## <u>பொருள் எண் : 285</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ( COMPACTOR ) காம்பேக்டர் வாகன எண் TN 67 K 9626 எண் கொண்ட வாகனத்திற்கு 2021-22 ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறும் பொருட்டு வாகனத்தை பழுது நீக்கப்பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.20000/- ஐ நகராட்சி பொது நிதி 2021-22 ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

1) அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

( **ந. க. எண் 2021/ 7382/ H2** )

**பொருள் எண் : 286**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN 84 J 3964 ACE LCV வாகனத்திற்கு தகுதி சான்று பெறும் பொருட்டு பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மான எண் 245 நாள் 29.10.2021 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு 26.11.2021 ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Raj Paul auto mobiles works near RC Church By-pass road, Srivilliputtur. | 28000/- |
| 2 | J.S.P Auto mobiles works, Rajapalayam road Thiruparkadal west Srivilliputtur. | 29000/- |

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரிசை எண் 1 ல் காணும் Raj paul auto mobiles works near RC Church By-pass road, Srivilliputtur என்ற நிறுவனம் ரூ. 28000/- தந்துள்ள குறைந்த விலைப்புள்ளித் தொகையை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

( **ந. க. எண் 2021/ 6446/ H2** )

**பொருள் எண் : 287**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN 84 C 9626 காம்பாக்டர் வாகனத்தின் வாகன காப்பீட்டு காலம் 23.11.2021 ல் முடிவடைந்து விட்டது. மேற்படி வாகனத்திற்கு 2021-22 ம் ஆண்டுக்கான வாகன காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்குரிய புதுப்பிப்பு கட்டணம் ரூ. 41992/- யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) அனுமதிக்கலாம்.
2) சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

( **ந. க. எண் 2021/ 7349/ H2** )

**பொருள் எண் : 288**

நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தல் 2021 க்கான தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் சட்டபூர்வ ஆணை எண் S.O.No.61/2021 / TNSEC /ME-1 Dated: 30.10.2021 ன் படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் வாக்குச்சாவடி பட்டியலினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் விருதுநகர் அவர்கள் நாள் 08.11.2021 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

( **ந. க. எண் 2019/ 2252/ A3** )

**பொருள் எண் : 289**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் **TN84 J3915 TATA ACE LCV** வாகனத்திற்கு பழுதுநீக்கும் பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தீர்மான எண் நாள்30.09.2021ல் நிர்வாக அனுமதிவழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு 09.11.2021ம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றன.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | **R.A.267, Srivilliputhur Block Agro Engg &Service co-op. Centre Ltd. madavar vilagam pillayar kovil st srivilliputhur** | 39900/- |
| 2 | **SP.SPL.177, Rajapalayam Agro Engg &Service co-op. Centre Ltd.** | 40600/- |

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.39900/- R.A.267, Srivilliputhur Block AgroEngg and Service Co-op centre Ltd, என்ற நிறுவனம் தந்துதுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண் 5667/2021/எச்2)

**<u>பொருள் எண் : 290</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் **TN84 J4923 TATA ACE LCV** வாகனத்திற்கு பழுதுநீக்கும் பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தீர்மான எண் நாள்29.10.2021ல் நிர்வாக அனுமதிவழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு 9.11.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றன.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | **R.A.267, Srivilliputhur Block Agro Engg &Service co-op. Centre Ltd. madavar vilagam pillayar kovil st srivilliputhur** | 39900/- |
| 2 | **SP.SPL.177, Rajapalayam Agro Engg &Service co-op. Centre Ltd.** | 43750/- |

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.39900/- R.A.267, Srivilliputhur Block AgroEngg and Service Co-op centre Ltd, என்ற நிறுவனம் தந்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். **( ந.க.எண் 6713/2021/எச்2)**

**<u>பொருள் எண் : 291</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 03.12.2018 முதல் பணி புரிந்து வரும் திரு. மா. இரத்தினகுமார், இளநிலை உதவியாளர் என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக அருகில் உள்ள சிவகாசி மாநகராட்சிக்கு இளநிலை உதவியாளராக பணி மாறுதல் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். திரு. மா. இரத்தினக்குமார், இளநிலை உதவியாளர் பணி மாறுதல் விண்ணப்பத்தினை திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு மேலனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

( **ந. க. எண் 2021/ 6962 C1** )

**<u>பொருள் எண் : 292</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியானது 33 வார்டுகளைக் கொண்ட முதல்நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 75396 இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட வருவாய் உதவியாளர்கள் பணியிடங்கள் 12 ஆகும். இவற்றில் 4 வருவாய் உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. மொத்த வரிவிதிப்பு எண்ணிக்கை சொத்துவரி-30732, தொழில்வரி-1245, காலியிடவரி-1484, குடிநீர் வரி-14471, வரியில்லா இனங்கள்-302, மற்றும் குப்பை வரி உட்பட 30628 ஆக மொத்தம் 78862 ஆகும். நான்கு வருவாய் உதவியாளர் பணியிடங்கள் ஆறு மாதங்களுக்கு மேலாக முறையே 13.12.2017, 11.3.2018, 23.4.2020, 20.5.2021 முதல் காலியாக உள்ளது. இதனால் நகராட்சியின் அத்தியாவசியமான வரி வசூல் பணியில் 100% இலக்கினை அடைய முடியாத, இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வரி வசூல் பணியினை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் நகராட்சியில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு நகராட்சியின் பங்களிப்பினை ஈடு செய்வது, ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் பிடித்தங்களை அரசு தலைப்பில் உரிய நேரத்தில் செலுத்துவது, மின் கட்டணங்கள் செலுத்துவது மற்றும் பொது மக்களுக்கு செய்ய வேண்டிய அத்தியாவசிய அடிப்படை பணிகளை போதிய நிதி ஆதாரம் இல்லாமல் செயல்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. மாநில நிதிக்குழுவினால் வழங்கப்படும் மான்யத்தில் 40% ஓய்வு பெற்ற

பணியாளர்களின் ஓய்வூதியத்திற்கு பிடித்தம் செய்யப்பட்டு மீதி 60% மானியம் பெறப்பட்டு வருவதால் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் வழங்குவதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே காலியாக உள்ள வருவாய் உதவியாளர்கள் பணியிடத்தை பூர்த்தி செய்வது மிக மிக அத்தியாவசியமாகிறது. 7 வது ஊதியக்குழு பரிந்துரையின்படி இந்நகராட்சியின் ஊதியச் செலவினமானது 78.62% உள்ளது. மேற்படி பணியிடத்தின் அத்தியாவசியத்தினை முன்னிட்டு ஊதியச் செலவினம் 78.62% சதவீதம் என்பதனை தளர்த்தி இந்நகராட்சியில் காலியாக உள்ள வருவாய் உதவியாளர் பணியிடங்களை பூர்த்தி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

வரிவசூல் பணியின் முக்கியத்துவத்தை கருதி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் காலியாக உள்ள வருவாய் உதவியாளர்கள் பணியிடத்தினை பூர்த்தி செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 293**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 67 K 0312 டிப்பர் லாரி வாகனத்திற்கு வாகன காப்பீடு காலம் 23.11.2021 ல் முடிவடைவதால் மேற்படி டிப்பர் லாரி வாகனத்திற்கு 2021-22 ம் ஆண்டுக்கான வாகன காப்பீட்டுத் தொகை ரூ.32359/- யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வாகன காப்பீட்டுத் தொகை செலுத்தியதையும் மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 294**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி 33 வார்டுகளில் தினசரி டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக கொசுப்புழு கண்டறியும் கள ஆய்வின் போது நகர் பகுதியில் திறந்த வெளியிலும் இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடைகளிலும், பழைய இரும்பு கடைகளிலும், வணிக வளாகங்களிலிருந்தும் பறிமுதல் செய்யப்பட்ட பழைய சிதலமடைந்த டயர்கள் மற்றும் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களின் பழைய டயர்கள் ஆகிய அனைத்தும் நகராட்சி குப்பை கிடங்கில் வைக்கப்பட்டுள்ளது. தற்போது வடகிழக்கு பருவ மழை காரணமாக மேற்படி பழைய சிதலமடைந்த டயர்களில் தண்ணீர் தேங்கி கொசுபுழு உருவாகாமல் தடுக்கும் வகையில் டயர்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டியுள்ளதை கருத்தில் கொண்டு தற்போது இருக்கும் நிலையில் பழைய டயர்கள் அனைத்தையும் பொது ஏலம் மூலம் கழிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதாரம் நலன் மற்றும் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பொது ஏலம் விட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**ந. க. எண் 2021/ 7538/ H1**

**பொருள் எண் : 295**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் நகரில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து மக்கும் குப்பை கழிவுகள் கொண்டு மடவார் விளாகம் பகுதியில் அமைந்துள்ள 3 மெட்ரிக் டன் கொள்ளளவு திறன் கொண்ட நகராட்சி நுண் உரக்குடில் மையம் மூலம் நகராட்சி தூய்மை பணியாளர்களை கொண்டு உரத்தயாரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு ஏற்கனவே பணியாற்றி வரும் 114 தூய்மை பணியாளர்களுடன் கூடுதலாக189 தூய்மை பணியாளர்களை நியமனம் செய்துகொள்ள (Outsourcing basis) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை K.Dis No28369/J3/2018 நாள்04.12.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் நகராட்சியின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு முதல் கட்டமாக 68 பணியாளர்கள் மட்டும் தனியார் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதில் கடுமையான சிரமம் ஏற்பட்டு வருகிறது.

இந்நகராட்சி மடவார் விளாகப் பகுதியில் செயல்பட்டு வரும் நுண்உரக்குடில் மையத்தில் உரம் தயாரிக்க நகராட்சி தூய்மை பணியாளர்களை பயன்படுத்துவதால் நகருக்குள் குப்பைகள் வாங்குவதற்கு தேவையான தூய்மை பணியாளர்களின்றி கூடுதல் சிரமம் ஏற்பட்டுள்ளது. மேற்படி நுண்உரக்குடில் மையத்தில் உரம் தயாரிக்க நகராட்சி தூய்மை பணியாளர்களை பயன்படுத்துவது மற்றும் தளவாடச்சாமான்கள் வாங்குவது, கரைசல் போன்ற இதர செலவுகள் உட்பட மாதம் ஒன்றிற்கு சராசரியாக ரூ1,24,800/-செலவினம் ஏற்படும். எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு மடவார் விளாகப் பகுதியில் செயல்பட்டு வரும் நுண்உரக்குடில் மையத்தை தனியார் நிறுவனம் அல்லது தன்னார்வு தொண்டு நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கும்பட்சத்தில் மாதந்தோறும் நிதி சேமிப்பு ஏற்படுவதுடன், நகராட்சி தூய்மைபணியாளர்களை நகருக்குள் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தி தூய்மை பணிகளை சிறப்பாக மேற்கொள்ளமுடியும்.

மேலும் அரசு ஆணை எண்219 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்21.06.2002ன் படி நுண் உரக்குடில் மையத்தின்மூலம் தயார் செய்யப்படும் கலவை உரத்தினை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நுண்உரக்குடில் மூலம் உரத்தயாரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ளும்பட்சத்தில் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை.

எனவே திடக்கழிவு மேலாண்மை விதிகள்-2016 விதி எண்15(V)ன் படியும் 24.08.2018 அன்று வெளியிடப்பட்டுள்ள அரசிதழ் (எண் 303) படியான திடக்கழிவு மேலாண்மை விதிகள் செயல்படுத்துவதற்கான மாநிலக் கொள்கையின் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்19396/2017/பி3 நாள் 23.01.2019ல் நுண்உரக்குடில் மையத்தில் உரத்தயாரிப்பு பணியை தனியார் நிறுவனம் அல்லது தன்னார்வு தொண்டு நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஏற்று நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை.

இந்நகராட்சி மடவார் விளாகம் பகுதியில் அமைந்துள்ள 3மெட்ரிக் டன் கொள்ளளவு திறன் கொண்ட நுண்உரக்குடிலை பராமரிக்கும் பணியை புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் நுண் உரக்குடிலை 4.1.2021 முதல் மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணியை ஸ்ரீவி சாரிட்டபிள் டிரஸ்ட் தொண்டு நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த பத்து மாதங்களாக இயங்கி வந்த நுண்உரக்குடில் மையத்தை தவிர்க்க முடியாத காரணங்களால் தொடர்ந்து நடத்துவதற்கு இயலாது என தெரிவித்து நுண்உரக்குடிலை 9.10.2021 முதல் மீண்டும் திரும்ப ஒப்படைப்பு செய்ய ஸ்ரீவி சாரிட்டபிள் டிரஸ்ட் தொண்டு நிறுவனத்தால் கடிதம் கொடுக்கப்பட்டது.

நகர்மன்றத்தீர்மான எண் 221 நாள் 30.9.2021 ன்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் சுகாதார நலன் கருதி மேற்படி தொண்டு நிறுவனத்திற்கு வழங்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

எனவே ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மடவார் வளாகம் பகுதியில் அமைந்துள்ள 3மெட்ரிக் டன் கொள்ளளவு திறன் கொண்ட நுண்உரக்குடில் மையத்தை தங்கள் சொந்த பொறுப்பில் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் பராமரித்திட **கிரீனோ வில் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் (Greeno will Waste Management) 42 பெரியசாமி கோவில் தெரு ஸ்ரீவில்லிபுத்தூர்** நிறுவனம் முன்வந்து விண்ணப்பித்துள்ளது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வழிமுறைகளின்படியும் நகராட்சி சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு **கிரீனோ வில் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் (Greeno will Waste Management) 42 பெரியசாமி கோவில் தெரு ஸ்ரீவில்லிபுத்தூர்** ) மடவார்விளாக நுண்உரக்குடில் மையத்தை மேற்படி நிறுவனத்தின் சொந்த பொறுப்பில் ஒப்படைக்கும் நாள் 1.12.2021 முதல் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பராமரித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

1) அனுமதிக்கலாம்

2) மேற்படி **கிரீனோ வில் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் (Greeno will Waste Management) 42 பெரியசாமி கோவில் தெரு ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனம்** செயல்படுவதற்கான ஒப்பந்த நிபந்தனைகளுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ஒப்பந்த நிபந்தனைகள்**

1. நுண் உரக்குடிலை, உரத்தயாரிப்பு பணிகளைத் தவிர ஏனைய பணிகளை மேற்கொள்ளக்கூடாது.
2. மாநில அரசு பரிந்துரைந்துள்ள தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மட்டுமே உரத்தயாரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
3. நுண் உரக்குடில் அமைந்துள்ள இடம் பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலத்திற்கு மிக அருகாமையில் உள்ளதால், நுண் உரக்குடில் வளாகம் முழுவதும் 24 மணி நேரமும் துர்நாற்றம் இல்லாமல் தூய்மையாக பராமரிக்க வேண்டும்.
4. நுண் உரக்குடில் வளாகப் பகுதியில் ஆணையர் அவர்களின் முன் அனுமதி இல்லாமல் கட்டிடப்பணி மேற்கொள்ளவோ அல்லது ஏற்கனவே உள்ள கட்டுமானத்தை மாற்றி அமைக்கவோ கூடாது.
5. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016, விதி 15(V)ன் படி உரத்தயாரிப்பு பணிகளுக்கு மட்டுமே நுண் உரக்குடில் ஒப்படைக்கப்படுவதால் நுண் உரக்குடில் அமைந்துள்ள வளாகம் மற்றும் நுண் உரக்குடில் ஆகியவற்றிற்கு எந்தவிதமான உரிமையும் எதிர்காலத்தில் நிறுவனம் கோர முடியாது.
6. நுண் உரக்குடில் பராமரிப்பு மற்றும் உரத்தயாரிப்பு பணியை நிறுவனம் மேற்கொள்வதற்கான குறைந்த பட்ச கால ஒப்பந்த அளவு மூன்று ஆண்டுகள் ஆகும்.
7. ஒப்பந்த காலத்தை நீட்டிக்கவோ அல்லது ரத்து செய்யவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.
8. ஒப்பந்த நிபந்தனைகளை மீறினால் தங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.
9. நுண் உரக்குடில் பணிகளுக்கு தேவையான மின்வசதி, மின் கட்டணம் தண்ணீர் வசதி மற்றும் கழிப்பறை வசதிகளை நகராட்சியே செய்து தரும்.
10. நுண் உரக்குடிலில் உள்ள இயந்திரங்களை தனியார் நிறுவனம் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒப்பந்த காலம் முடிந்த பின்பு இயந்திரங்களை இயங்கும் நிலையில் ஓப்பந்த நிறுவனம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
11. மின் அமைப்பு மற்றும் இயந்திரங்களில் ஏற்படும், சிறு சிறு பழுதுப் பணிகளை சொந்த செலவில் நிறுவனமே மேற்கொள்ள வேண்டும்.
12. உரத்தயாரிப்பு பணிகளுக்கு கூடுதலான வசதிகள் தேவைப்படும் பட்சத்தில், உரிய விதிகளுக்கு உட்பட்டு ஆணையரின் எழுத்துப்பூர்வ அனுமதி பெற்று நிறுவனம் மேற்கொள்ளலாம்.
13. உரத்தயாரிப்பு பணிகளுக்காக தேவைப்படும் பணியாளர்களை நிறுவனம் தங்கள் சொந்தப் பொறுப்பில் பணி அமர்த்திக் கொள்ள வேண்டும். இதற்காக நகராட்சி எந்தவித ஊதியமும் வழங்காது.
14. தொழிலாளர் நலத்திட்டங்களுக்கு உட்பட்டு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.
15. 18 வயதிற்கு கீழ் உள்ளவர்களை பணியில் ஈடுபடுத்தக்கூடாது
16. முழு உடல் தகுதி மற்றும் ஆராக்கியமான பணியாளர்கள் மட்டும் பணியில் ஈடுபடுத்த வேண்டும்.
17. அவசர மருத்துவத் தேவைகளுக்காக முதலுதவிப்பெட்டி (First Aid Box) நுண் உரக்குடிலில் வைக்கப்பட வேண்டும்.
18. பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் பணியாளர்களை பணி செய்ய அனுமதிக்கக்கூடாது.

19. உர விற்பனை செய்யும் பணிக்கு நகராட்சியின் பெயரினை பயன்படுத்தக்கூடாது.
20. நுண் உரக்குடிலில் பணியாற்றும் பணியாளர்களுக்கு விபத்து உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு பொறுப்பேற்கவோ அல்லது நஷ்ட ஈடு வழங்கவோ நகராட்சியை கோர உரிமை இல்லை. இவ்விசயத்திற்கு சம்பந்தப்பட்ட நிறுவனமே பொறுப்பு ஆகும்.
21. மத்திய, மாநிலஅரசு மற்றும் நகராட்சி அவ்வப்பொழுது வெளியிடப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டு பராமரிப்பு மற்றும் உரத்தயாரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
22. தினசரி உரத்தயார் செய்யும் பணிக்கு தேவையான மக்கும் தன்மையுடைய கழிவுகள் (wet waste) நகராட்சியால் வழங்கப்படும்.
23. தினசரி குறைந்தபட்சம் மூன்று மெட்ரிக் டன் கழிவுகள், நுண் உரக்குடில் வளாகத்திற்கு நகராட்சியால் வழங்கப்படும்.
24. தினசரி பெறப்படும் கழிவுகளின் அளவினை சரிபார்த்து பெற்றுக்கொண்டு, அதற்கான பதிவேடுகளில் பதிவு செய்ய வேண்டும்.
25. தினசரி உற்பத்தி செய்யப்படும் உரத்தின் அளவுகளின் விபர பதிவேட்டினை, 15 நாட்களுக்கு ஒரு முறை நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
26. உரம் விற்பனை செய்வது, சந்தைப்படுத்துவது உள்ளிட்ட பணிகளை நிறுவனமே மேற்கொள்ள வேண்டும்.
27. மத்திய நகர்புற அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு விவசாயத் துறையினரின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு உர விற்பனை மேற்கொள்ள வேண்டும்.
28. ஒப்பந்த முறிவு அல்லது இடையில் ஏற்று நடத்த விருப்பமில்லை என நிறுவனம் முடிவெடுத்தால், 60 நாட்கள் கால இடைவெளியுடன் உரிய அறிவிப்பினை, ஆணையர் அவர்களுக்கு எழுத்து பூர்வமாக வழங்கப்பட வேண்டும்.
29. ஒப்பந்தம் கையெழுத்தான நாள் முதல் ஒப்பந்த நிபந்தனைகள் அமுலுக்கு வரும்.
30. நுண் உரக்குடில் மைய கட்டிடத்தை எவ்விதத்திலும் சேதம் ஏற்படுத்தக் கூடாது. சேதம் ஏற்பட்டால் நிறுவனத்தின் சொந்த செலவில் சரிசெய்து கொடுக்க வேண்டும்.

மேற்காண் நிபந்தனைகளுக்குட்பட்டு **கிரீனோ வில் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் (Greeno will Waste Management) 42 பெரியசாமி கோவில் தெரு ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனம்** மடவார் விளாகம் நுண்உரக்குடில் மையத்தை ஒப்படைக்கும் நாள் 1.12.2021 முதல் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பராமரித்திட மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண் 7589 /2020/எச்1)

**<u>பொருள் எண் : 296</u>**

நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு Toner வாங்க 09-11-2021 ம் தேதி பின்வரும் மூன்று நிறுவனங்களில் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ. எண். | பணி விவரம். | சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | K.B. சிஸ்டம்ஸ் சர்விஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | டிஜி டெக் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விலை | தொகை | விலை | தொகை | விலை | தொகை |
| 1 | Toner-10 | 1500 | 15000 | 1650 | 16500 | 1700 | 17000 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி ஒப்புக்கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>** குறைந்த விலைப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.
**ந.க.எண் 6845/2021/E1**

**பொருள் எண் : 297**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர்மன்ற திரு.வி.க. துவக்கப்பள்ளி பழுது பார்க்கும் பணிக்கு 30-11-2021 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு கே.செந்தில் குமார், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 0.23% குறைவு. |
| 2 | திரு கோ.வெங்கடேசன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 10.92% அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கே.செந்தில் குமார், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட **0.23%** குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்ட பணியினை ரூ 45,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 15-11-2021 ல் தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கே.செந்தில் குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.23% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புளியினை ஒப்புக்கொள்ளலாம்.

**ந.க.எண் 7137/2021/E1**

**பொருள் எண் : 298**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர்மன்ற கிருஷ்ணன் கோவில் தெரு நடுநிலைப்பள்ளிப்பள்ளி சத்துணவு மையம் பழுது பார்க்கும் பணிக்கு 30-11-2021 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு கோ.வெங்கடேசன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 0.29% குறைவு. |
| 2 | திரு கே.செந்தில் குமார், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 1.76% அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கோ.வெங்கடேசன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.29% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்ட பணியினை ரூ 55,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 15-11-2021 ல் தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கோ.வெங்கடேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.29% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புளியினை ஒப்புக்கொள்ளலாம்.

**ந.க.எண் 7136/2021/E1**

**பொருள் எண் : 299**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர்மன்ற திரு.வி.க. மேல்நிலைப்பள்ளி பழுது பார்க்கும் பணிக்கு 30-11-2021 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு கே.செந்தில் குமார், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 0.20% குறைவு. |
| 2 | திரு கோ.வெங்கடேசன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 11.91% அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கே.செந்தில் குமார், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.20% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்ட பணியினை ரூ 65,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 15-11-2021 ல் தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கே.செந்தில் குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.20% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புளியினை ஒப்புக்கொள்ளலாம்.

**ந.க.எண் 7135/2021/E1**

**பொருள் எண் : 300**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்:21191/2021/அம்ரூட்2, நாள்:13-11-2021 ன் படி 2021-22 ம் ஆண்டிற்கான 15 வது மத்திய நிதிக்குழு பரிந்துரைப்படி பின்வருமாறு நிதி விடுவிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுள்ளது.

| வ. எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | Tied Grant | ரூ 114.00 லட்சம். |
| 2 | Untied Grant | ரூ 76.00 லட்சம். |
| | மொத்தம் | ரூ190.00 லட்சம். |

மேற்கண்ட Tied Grant மானியம் ரூ114/- லட்சத்தில் 50 சதவீதம் சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட நட்சத்திர குறியீட்டை அடைவதற்கான பணிகள் மேற்கொள்ளவும் மீதமுள்ள 50 சசவீதம் குடிநீர், மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் Untied Grand மானியம் ரூ.76/- லட்சத்தில் பன்னிரெண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 18 வகைகளின் கீழ் பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி பின்வரும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில். |
|---|---|---|
| | **Tied Grant 50 சதவீதம். குடிநீர் பணிகள்.** | |
| 1 | தலைமை நீரேற்று நிலையம் நீர் சேகரம் ஆகும் கிணறு அருகில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி. | 15.00 |
| 2 | தலைமை நீரேற்று நிலையம் நீர் கிணறு எண் : 3 அருகில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி. | 15.00 |
| 3 | நீர் சேகரம் ஆகும் கிணறு அருகில் பம்ப் அறை கட்டும் பணி. | 10.00 |
| 4 | தலைமை நீரேற்று நிலையம் நீர் கிணறு எண் : 7 அருகில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி. | 15.00 |
| 5 | தூர்ந்துபோன ஆழ்துளை கிணற்றில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கும் பணி. ( 30 இடங்கள் ) | 5.00 |
| | மொத்தம் | **60.00** |
| | **Tied Grant 50 சதவீதம். சுகாதாரப் பணிகள்.** | |
| 6 | பேருந்து நிலையத்தில் உள்ள பொதுக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 6.00 |
| 7 | ரெங்கநாதபுரம் தெருவில் உள்ள சமுதாயக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 5.00 |
| 8 | கீழப்பட்டி தெருவில் உள்ள சமுதாயக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 5.00 |
| 9 | முதலியார்பட்டி தெருவில் உள்ள ஆண்கள் சமுதாயக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 5.00 |
| 10 | முதலியார்பட்டி தெருவில் உள்ள பெண்கள் சமுதாயக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 5.00 |
| 11 | மடவார்வளாகம் தெருவில் உள்ள சமுதாயக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 5.00 |

| | | |
|---|---|---|
| 12 | மேட்டுத்தெருவில் உள்ள பெண்கள் சமுதாயக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 5.00 |
| 13 | ஆராய்ச்சிபட்டி திரௌபதியம்மன் கோவில் தெருவில் உள்ள சமுதாயக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 6.00 |
| 14 | சீனியாபுரம் தெருவில் உள்ள சமுதாயக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 6.00 |
| 15 | பெருமாள்பட்டி செக்கடி தெருவில் உள்ள சமுதாயக்கழிப்பறை மராமத்து செய்யும் பணி. | 6.00 |
| 16 | தட்டாங்குளம் பட்டித் தெருவில் உள்ள சமுதாயக் கழிப்பறை மராமத்து செய்யும் பணி | 6.00 |
| | மொத்தம் | **60.00** |
| | **UnTied Grand** | |
| 17 | கிருஷ்ணன் கோவில் தெரு சுடுகாட்டில் தகன மேடை அமைக்கும் பணி | 10.00 |
| 18 | ரைட்டன்பட்டி மாணவியர் விடுதி அருகில் வடிகால், மற்றும் மங்காபுரம் தெரு, ரெங்கநாதபுரம் தெற்குத் தெரு, மாயாண்டிபட்டித் தெரு, ரெங்கநாதபுரம் சாலைத் தெரு, மேட்டுத் தெரு குறுக்குச்சந்து பள்ளிக்கூடம் அருகில், சீனியாபுரம் தெரு, பஜனைக்கூடம் தெரு, நந்தவனம் பட்டி முஸ்லிம் தெரு, அய்யம்பட்டி தெரு, மஞ்சப்பூ தெரு ஆகிய இடங்களில் சிறுபாலம் அமைக்கும் பணி | 10.00 |
| 19 | பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் வாகனம் நிறுத்தும் இடம் கட்டும் பணி | 6.00 |
| 20 | மருத்துவர் காலனி நுண்உரக்குடில் அணுகு சாலை பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 20.00 |
| 21 | பைபாஸ் சாலை சப்ஜெயில் எதிர்புறம் சமுதாயக் கழிப்பிடம் கட்டும் பணி | 25.00 |
| 22 | மதுரை ரோடு சுடுகாடு உள்புறம் உள்ள சமுதாயக் கழிப்பிடம் மராமத்து செய்யும் பணி | 6.00 |
| | மொத்தம் | **76.00** |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 7444/2021/ இ1**

**பொருள் எண் : 301**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி ரயில்வே நிலையத்திற்கு செல்லும் சாலை சிவகாசி மெயின் சாலையில் இருந்து கோவிந்தன் நகர் காலனி வழியாக ரயில்வே நிலையம் செலும் சாலை கடந்த 15 தினங்களாக பெய்த மழையின் காரணமாக மிகவும் சேதமடைந்து போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது. பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று சாலையில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை Wet Mix Mecadam கலந்த கலவையினால் நிரப்பப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட சாலை பழுது வேலை செய்யவும் அதற்காக ரூ15,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் அவசர அவசியம் கருதி நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு. சி. குழந்தைவேலு, வசம் ஒப்படைப்பு பணியாக செய்து முடிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 7206/2021/ இ1**

**பொருள் எண் : 302**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் 206 சிறு மின் விசை இறைப்பான்கள் மற்றும் **58** கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. சிறு மின் விசை இறைப்பான்கள் மற்றும் கழிப்பிடங்களில் உள்ள மோட்டார்களை 2021-22 ம் ஆண்டிற்கு மோட்டார் பழுது, ரீ வைண்டிங், ஸடாட்டர், ரோட்டார், ஹோஸ் பைப் பழுது மற்றும் அனைத்து பராமரிப்பு பணிகள் செய்யவும் அதற்காக ரூ.6,00,000/- க்கு நகர் மன்ற தீர்மான எண்; 127 நாள்; 31-05-2021 ன் படி அனுமதி பெற்பட்டு பழுது வேலைகள் நடைபெற்று வருகிறது. தற்பொது 1-10-2021 முதல் 31-03-2022 வரையுள்ள காலத்திற்கு மோட்டார்கள் பழுது பார்க்க ரூ6,00,000/- (ரூபாய் ஆறு லட்சம் மட்டும் ) தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு. மோட்டார்கள் பழுது பார்க்கும் பணியினை தற்போது நகர் மன்ற தீர்மான எண்149 நாள்; 30-06-2021 ன்படி பணி ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்தக்காரர் திரு அ.பாபு வசம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் செய்து முடிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம். பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். ஒப்பந்தக்காரர் திரு அ.பாபு வசம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் செய்து முடிக்க அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 2945/2021/ இ1**

**பொருள் எண் : 303**

15 வது மத்திய நிதிக்குழு பரிந்துரைப்படி 2020-21 ம் ஆண்டிற்கு இரண்டாவது தவணை Tied Grant Rs.91,65,026/- சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 20452/2020/LA3, Dated: 31.03.2021 ன் படி விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதியின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக தரைமட்ட குடிநீர் தொட்டியில் ஊரணிப்பட்டி மேல்நிலைத்தொட்டி, கோட்டைப்பட்டி மேல்நிலைத்தொட்டி மற்றும் நகராட்சி அலுவலக மேல்நிலை தொட்டி ஆகிய **3** மேல்நிலை தொட்டிகளுக்கும் புதிய சப்மெர்சிபிள் மோட்டார்கள் பொருத்தும் பணி மற்றும் செண்பக தோப்பு குடிநீர் தலைமையிடத்தில் புதிய சப்மெர்சிபிள் மோட்டார் பொருத்தும் பணி | ரூ.16,60,000/- |
| 2 | கோட்டைப்பட்டி நீர் தேக்க தொட்டியில் புதிதாக 20 எச். பி. சென்ட்ரிபியுகல் பம்ப் மாற்றும் பணி. | ரூ.24,40,000/- |
| 3 | கோட்டைப்பட்டி நீர்தேக்கம் மற்றும் நகராட்சி அலுவலக நீர் தேக்க தொட்டியில் **5** கிலோ குளோரினேசன் கேஸ் பிளாண்ட் அமைத்தல் மேலும் 100 கிலோ கொள்ள ளவு கொண்ட சிலிண்டர் பம்ப் ஹவுசில் சப்ளை செய்தல்.. | ரூ.25,00,000/- |
| 4 | கம்மாபட்டி காமராஜர் தெரு கழிப்பறை, அய்யம்பட்டி பெண்கள் கழிப்பறை, சாத்தூர் பிரதான சாலை கழிப்பறை ரைட்டன் பட்டி ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடம் பழுதுபார்த்தல். | ரூ.15,00,000/- |
| 5 | அய்யம்பட்டி பிள்ளையார் கோவில் தெரு ஆண்கள், பெண்கள் கழிப்பிடம், மற்றும் இடைய பொட்டல் தெரு கழிப்பிடம் பராமரிப்பு செய்தல். | ரூ12,00,000/- |
| | **மொத்தம்** | ரூ93,00,000/- |

மேற்கண்ட 5 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட 5 பணிகளுக்கும் நிர்வாக அனுமதி வழங்கலாம். மானியத் தொகை ரூ.91,65,026/- ஐ விட கூடுதலாக ஆகும் செலவு தொகை ரூ.1,34,974/- ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4046/ 2021 / இ1**

**பொருள் எண் : 304**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி திரு.வி.க. துவக்கப்பள்ளியில் மராமத்து பணிகள் செய்யவும் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு கழிப்பிட வசதிகள் செய்யவும் அதற்காக ரூ. 45,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம். தற்போது பள்ளி இயங்கி வருவதாலும் நகர்மன்ற தேர்தல் வாக்குச்சாவடியாக பயன்படுத்தப்பட உள்ளதாலும் தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம். பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். ( **ந.க.எண் 7137/2021/ E1** )

**பொருள் எண் : 305**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி கிருஷ்ணன் கோவில் தெரு நடு நிலைப்பள்ளியில் உள்ள சத்துணவுக்கூடம் மேற்கூரை சமீபத்திய மழை காரணமாக உடைந்து மழைநீர் உள்ளே வருகிறது. தடைத்தளம் தாழ்வாக உள்ளது. பள்ளி குழந்தைகளுக்கு உணவு தயார் செய்யும் இடமாக உள்ளதால் சுகாதாரம் கருதி உடனடியாக மேற்ககரை சரி செய்யவும் தளம் உயர்த்தி அமைக்கவும் வேண்டியது அவசியமாகும். எனவே மேற்கண்ட புழுது பணிகள் மேற்கொள்ளவும் அதற்காக ரூ.55000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம். குழந்தைகள் சத்துணவு மையமாக உள்ளதாலும் தற்போது பள்ளி இயங்கி வருவதாலும் தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம். பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 7136/2021/ E1**

**பொருள் எண் : 306**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி திரு.வி.க. மேல்நிலைப்பள்ளியில் மேற்கு பகுதி கட்டிடத்தில் வர்ணம் பூசவும் விளக்கு வசதி மின் விசிறி அமைத்தல் மழைநீர் தேங்காமல் தளம் அமைக்கவும் ஆகிய மராமத்து பணிகள் செய்யவும் அதற்காக ரூ. 65,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம். தற்போது பள்ளி இயங்கி வருவதாலும் நகர்மன்ற தேர்தல் வாக்குச்சாவடியாக பயன்படுத்தப்பட உள்ளதாலும் தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம். பணியிணை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 7135/2021/ E1**

**பொருள் எண் : 307**

நகராட்சியின் குடிநீர் ஆதாரங்களில் தற்போது மழைகாலமாக உள்ளதால் மழைநீர் அதிக அளவில் வருவதால் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் போது குளோரினேசன் செய்து குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. எனவே தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் குடிநீர் விநியோகம் செய்யும் போது பிளீச்சிங் பவுடர் கலந்து விநியோகம் செய்ய பிளீச்சிங் பவுடர் வாங்கவும் அதற்கான செலவுத்தொகை ரூ.25,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 7003/2021/ E1**

**பொருள் எண் : 308**

இந்நகராட்சியில் நடைபெற உள்ள 15 வது நிதிக்குழு பரிந்துரை இரண்டாவது ஒதுக்கீடு 2020-21 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் விருதுநகர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக இந்து தமிழ் நாழிதழில் வெளியிடப்பட்டுள்ளதற்கு கட்டணம் ரூ.8652 ஸ்ரீ வினோத் ஏஜென்ஸி ஸ்ரீவில்லிப்புத்தூர் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகாரம் ெய்யயலாம்.

**ந.க.எண் 4046/2021/ E1**

**பொருள் எண் : 309**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நகரமைப்பு பிரிவு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு **3**, பிளாக் **7**, நகரளவு எண் 886/6, 887/2 ல் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பான வழக்கு எண் O.S.No. 47/2020 க்கு எதிர்வாதுரை தாக்கல் செய்ததற்கு திரு. எஸ். சௌந்தரராஜன் வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.3000/- வழங்க மன்றப் பொருள் ஒப்புதலுக்காக.

**அலுவலகக்குறிப்பு**

இச்செலவினம் வருவாய் மற்றும் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 6839/2020/ F1**